## திராவிடத்தால் வாழ்கிறோம்

766

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

110

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# முதல்வர் மருந்தகங்கள்!

**மக்கள் நலனில் மகத்தான மைல் கல்!**

நாள்பட்ட நோய்களுக்காகவும், திடீர் மருத்துவத் தேவைகளுக்காகவும் வெளி மருந்தகங்களில் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, குறைந்த ஊதியத்தின் பெரும்பகுதியை இழக்க நேரிடும் ஏழை-எளியோரின் சுமையைக் குறைக்க, 'திராவிட மாடல் அரசு' உருவாக்கிய ஒரு திட்டம்தான் 'முதல்வர் மருந்தகம்'.

### திராவிட மாடலின் நல்வாழ்வு சேவை!

தமிழ்நாட்டை, இந்தியாவில் ஓர் வளர்ந்த மாநிலமாக சர்வதேச சமூகம்



ஏற்றுக்கொள்வதற்கான மிக முக்கியக் காரணிகள் இரண்டு. ஒன்று கல்வி, மற்றொன்று சுகாதாரம். சுகாதாரக் கட்டமைப்புகள், தமிழ்நாட்டில் பலம் பெறுவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் எடுத்த முயற்சிகள் அசாத்தியமானவை. மருத்துவமனைகளைக் கட்டமைத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களை வலுப்படுத்தின.

அரசு மருத்துவமனைகளில் அதிநவீன உபகரணங்களை இடம்பெறச் செய்தது போன்ற கட்டமைப்புப் பணிகள் மட்டுமின்றி, நுழைவுத்தேர்வு இல்லாமல் மருத்துவக் கல்வியில் மாணவர் சேர்க்கை நடத்தியது, மருத்துவ உயர் படிப்புக்கான மாணவர்கள் சேர்க்கைக்கு சிறப்பு இடஒதுக்கீடு வழங்கியது, கண்ணொளித் திட்டம் முதல் கர்ப்பிணிப் பெண்களுக்கான திட்டங்கள் வரை, பார்த்துப் பார்த்து தீட்டியது என கலைஞர் ஆட்சிக்கால சுகாதாரப் பணிகளுக்கான சான்றே, அமர்த்தியா சென் போன்ற பொருளாதார அறிஞர்கள், தமிழ்நாட்டுக்கு அளித்த பாராட்டுப்பத்திரம்.

கலைஞரின் நீட்சியாக, கொரோனா பேரிடரில் ஆட்சியில் அமரும்போதே, கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியில், நான்காயிரம் ரூபாய் உதவித்தொகையை பொதுமக்களுக்கு அளித்தவர், இன்றைய கழகத் தலைவர். பேரிடரில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு ரூ.5 லட்சம் வைப்புத்தொகை, அம்மாணவர்களின் கல்விச்செலவு, மாதாந்திர உதவித்தொகை என நிர்க்கதியாய் நின்ற அந்த மாணவர்களைத் தூணாய் அரவணைத்து துணைநின்றது திராவிட மாடல் அரசு. அதன்பிறகு, 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48', 'உடலுறுப்பு தானம் செய்வோருக்கு அரசு மரியாதையுடன் கூடிய இறுதிச்சடங்கு' என 'திராவிட மாடல் நாயகர்' தீட்டிய திட்டங்கள் ஏராளம். மிகக் குறிப்பாக, இதுவரை சுகாதாரத் துறையாக இருந்த பெயரை மக்கள் நல்வாழ்வுத்துறை என மாற்றி, அத்துறைக்கு அர்த்தமுள்ள பெயரை வழங்கினார். அந்தவகையில் ஏழை-எளிய மக்களுக்கான நல்வாழ்வுக்காக 'திராவிட மாடல் அரசு' செயல்படுத்திய திட்டமே 'முதல்வர் மருந்தகம்'.

### ஏழைகளுக்கான மருந்தகம்!

2024-ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் தங்களுக்கான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாலும், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நாள்பட்ட நோய்களுக்கு அடிக்கடி மருந்துகள் வாங்க வேண்டியிருப்பதாலும், பொதுமக்களுக்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக பொதுவான மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யும் வகையில், ஆயிரம் முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்படும். அதைச் சிறப்பாகச் செயல்படுத்த மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் மானியம், தேவையான கடனுதவி அரசால் வழங்கப்படும்" என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பின்படி முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுள்ள B.PHARM / D.PHARM சான்றிதழ் பெற்றவர்கள், அல்லது அவர்களின் ஒப்புதலுடன் மருந்தகம் அமைக்க விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனைக்குப் பின்னர் ஆயிரம் மருந்தகங்களுக்கான அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, பிப்ரவரி 24-ஆம் தேதி கூட்டுறவுத்துறை சார்பில், சென்னை, கோட்டூர்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் முதல்வர் மருந்தகங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்தார் முதலமைச்சர். அதன்பின்னர் சென்னை, பாண்டி பஜாரில் திறக்கப்பட்ட 'முதல்வர் மருந்தகத்தை' நேரில் பார்வையிட்டு, முதல் விற்பனையைத் தொடங்கிவைத்தார்.

### மருந்தகத்தின் சிறப்புகள்!

முதல்வர் மருந்தகம் அமைக்க தொழில் முனைவோர்களுக்கு ரூ.3 லட்சமும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.2 லட்சமும் மானியமாக வழங்கப்பட்டன. இந்த மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துகள், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. மருத்துவம் சார்ந்த இதர மருத்துவ உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்காப்ஸ், டாம்கால் மற்றும் யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ரா ஜீட்டிக்கல்ஸ் உள்ளிட்ட மருந்து வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு மருந்தகங்களுக்கு வழங்கப்படுகிறது. மொத்தம் 762 மருந்து வகைகள். அறுவை சிகிச்சைக்கான மருந்துகளும் இங்கு கிடைக்கும்.

முதல்வர் மருந்தகத்தில் வெளிச்சந்தையை விட 75% விலை குறைவாகவும், ஒன்றிய அரசின் மருந்தகங்களைக் காட்டிலும் 20% விலை குறைவாகவும் மருந்துகள் கிடைக்கும். அதாவது, சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த விற்பனை செய்யப்படும் 30 மாத்திரைகள் கொண்ட ஒரு அட்டை வெளிச்சந்தையில் 70 ரூபாய். ஆனால் முதல்வர் மருந்தகத்தில் 11 ரூபாய்க்கு வாங்கிக்கொள்ளலாம். இதே மருந்து ஒன்றிய அரசின் மருந்தகத்தில் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் 'முதல்வர் மருந்தகங்கள்' திறக்கப்பட்ட முதல் நாளிலேயே பொதுமக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக, தலைநகர் சென்னையில் மட்டும் 39 மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.




### பரப்பப்பட்ட அவதூறு!

'முதல்வர் மருந்தகம்' அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே எதிர்க்கட்சிகள் அவரவர் திறமைக்கு ஏற்ப, இது தங்கள் திட்டம் என அவதூறு பரப்பத் தொடங்கிவிட்டனர். குறிப்பாக, இது அம்மா மருந்தகத்தை காப்பி அடித்து தொடங்கப்பட்டிருப்பதாக அ.தி.மு.க. தரப்பும், ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட 'ஜன் ஔஷாதி' மருந்தகங்களை காப்பி அடித்திருப்பதாக பா.ஜ.க.வினரும் விமர்சனங்களை வைத்தனர். ஆனால் உண்மை அதுவல்ல.

2009-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தி.மு.க. அமைச்சர்கள் வைத்த கோரிக்கையின்படி, அன்றைய மன்மோகன் சிங் தலைமையிலான அரசால் 100 மருந்தகங்கள் தொடங்கப்பட்டன. ஆனால், வெற்றிகரமாகத் தொடரப்படாத நிலையில், தமிழ்நாட்டில் மலிவு விலை மருந்தகங்களைச் செயல்படுத்த முடிவெடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அன்றைய கூட்டுறவுத்துறை அமைச்சரான கோ.சி.மணி அவர்கள் கலைஞரின் அறிவுறுத்தலில், அதற்கான முன்முயற்சிகளை எடுக்க, 2010-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 210 கூட்டுறவு மருந்தகங்கள் முளைத்தன. அவற்றின் நீட்சியே பின்னர் வந்த ஆட்சியில் முளைத்த அம்மா மருந்தகங்கள். அதேபோல, நாடு முழுவதும் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படும் மருந்தகங்களின் எண்ணிக்கை 10,300 மட்டுமே. ஆனால் இன்று தமிழ்நாட்டில் மட்டும் திராவிட மாடல் அரசு ஆயிரம் மருந்தகங்களைத் தொடங்கியிருக்கிறது.

அதுமட்டுமின்றி கூட்டுறவு மருந்தகங்களும், அம்மா மருந்தகங்களும் வழக்கம்போல செயல்படுகின்றன. இதுதான் திராவிட மாடலின் ஜனநாயகப் பண்பு, இதனால்தான் அவர் திராவிட மாடல் நாயகர்!

> **"கூட்டுறவு மருந்தகங்களும், அம்மா மருந்தகங்களும் வழக்கம்போல செயல்படுகின்றன. இதுதான் திராவிட மாடலின் ஜனநாயகப் பண்பு, இதனால்தான் அவர் திராவிட மாடல் நாயகர்!"**

...துடிக்கும்

## `கலைஞரைப் போலவே மு.க.ஸ்டாலின்!'

'நான் முதல்வன் திட்டம்' தந்த முதல்வருக்கு வாழ்த்து என 'திராவிட மாடல் நாயகர்' நம் முதலமைச்சருக்கு முகநூலில் வாழ்த்துப் பதிவிட்டுள்ள பேராசிரியர் அ.ராமசாமி, 'நான் முதல்வன் திட்டம்' போன்று, கலைஞர் செயல்படுத்திய திட்டத்தால், தான் பயன்பெற்றதைப் பதிவு செய்துள்ளதுடன், அவரது அனுபவத்தை எழுதிய கட்டுரை இணைப்பையும் பகிர்ந்துள்ளார்.

அவரது பதிவிலிருந்து...

"நான் முதல்வன் திட்டத்தின் அடிப்படைகளோடு கூடிய ஒரு திட்டத்தை 50 ஆண்டுகளுக்கு முன்னால்,1971-இல் அப்போதைய முதல்வர் கலைஞர் அறிமுகம் செய்தார் எனச் சொன்னால், பலரும் ஆச்சரியம் அடையக்கூடும். ஆம், ஆச்சரியம்தான் அடைவார்கள். அதனால் பலன் அடைந்தவர்கள் பற்றிய விவரங்களும் தெரியாமல் இருக்கலாம். ஏனென்றால், அத்திட்டத்தைச் சிறப்புப் பெயர் ஒன்றினால், அப்போது அவர் அறிமுகம் செய்யவில்லை. செய்யவேண்டும் என்று கூட நினைக்கவில்லை. அவர் அறிமுகம் செய்த திட்டத்தினால் உயர்கல்வி பெற்றவன் நான்.

'கிராமப்புற மாணவர் மேம்பாட்டுத்திட்டம்' என அவர் உருவாக்கிய திட்டம், கற்றலும் அறிவை வளர்த்துக்கொள்ளுதலும் அனைவராலும் முடியும்; போதிய வாய்ப்புகள் கிடைத்தால் போதும்; அனைவருமே மேம்பட்ட நிலைக்கு வருவார்கள் என்ற நம்பிக்கையை விதைத்தது. ஒவ்வொரு பள்ளியிலும் எட்டாம் வகுப்பில் முதலிடம் பெறும் மாணாக்கர்களுக்குத் தனியாகத் திறனறித் தேர்வு நடத்தி, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்தும் இருவர் தெரிவு செய்யப்பட்டார்கள். அப்படித் தெரிவு செய்யப்பட்டவர்கள் அடுத்த ஆண்டு முதல், நகர்ப்புறப் பள்ளிகளில் சேர்ந்து பயிலலாம். விடுதியில் தங்கிப் படிக்கலாம் என மாற்றப்பட்டது. அப்படியான 10 பள்ளிகளின் பெயர்களும் அடையாளப்படுத்தித் தரப்பட்டன. அந்த மாணவர்களுக்கு ரூ.1000 உதவித் தொகையும் அளிக்கப்பட்டது.விடுதியில் தங்கிப் படிக்கலாம் என அறிவிப்புச் செய்யப்பட்ட ஆண்டில் நான் தேர்வு செய்யப்பட்டேன்.

பள்ளிக் கல்வியோடு முடிந்திருக்கக்கூடிய எனது படிப்பு, இந்தியாவின் மிக உயர்ந்த படிப்பான முனைவர் பட்டம் வரை நகர்ந்ததற்கு அந்தத் திட்டமே காரணம் என எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். 70 தலைக்கட்டுகள் கொண்ட தச்சப்பட்டி என்ற மலையோர கிராமத்தில் பிறந்த என்னை, திண்டுக்கல், மதுரை என நகரங்களுக்கு அனுப்பி, தொடர்ந்து படிக்கச் செய்தது கலைஞர் உருவாக்கிய திட்டம். திறமையாளர்களைக் கண்டறிவதிலும், திறப்புகளை உருவாக்குவதிலும் கலைஞரைப் போலவே இருக்கிறார் மு.க.ஸ்டாலின்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியரிடம் இருந்து பெற்ற புத்தகம்!



எஸ்.அருள்ஜோதி

2007-ஆம் ஆண்டு அன்றைய கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் புதுச்சேரி மாநிலத்திற்கு, கம்பன் கழகத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்திருந்தார். அந்தக் கூட்டத்தில், பேராசிரியர் வெளியிட்ட புத்தகத்தையும் பெற்று மகிழ்ந்தேன். அன்றைக்கு எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தை இன்றளவும் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன்.

– எஸ்.அருள்ஜோதி,
தமிழாசிரியர் (ஓய்வு), கடலூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் அரசியல் வாரிசு, கலைஞர்!

1969-ஆம் ஆண்டு ஜூலையில் கேரளாவில் இருந்து வெளிவரும் 'மனோரமா' இதழ் அன்றைய தமிழக முதல்வர் கலைஞரைப் பற்றி புகழ்ந்து எழுதியிருந்தது. "புகழ்வாய்ந்த ஒரு தலைவருக்குப் பின் வாரிசாக இன்னொருவர் அமைவதென்பது அவ்வளவு எளிதல்ல. கலைஞர் முதலமைச்சராக வந்த பின், பல செயல்களின் மூலம் அவர் 'அண்ணாவின் சரியான வாரிசு' என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர்களில் அவர் ஒரு கலைஞர். கலைஞர்களில் அவர் ஒரு முதலமைச்சர்" எனப் பாராட்டியது அவ்வேடு.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.